# 19 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா
# பணி ஒதுக்கீடு...

ஆகஸ்ட் **4** முதல் **15** வரை நடைபெறவிருக்கும் ஈரோடு புத்தகத் திருவிழா - **2023** ஐ முன்னிட்டு மக்கள் சிந்தனைப் பேரவையின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் **30.07.2023** ஆம் தேதி காலை **11** மணிக்கு ஈரோடு, செங்குந்தர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இவ்வாண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவைச் சிறப்பாக நடத்துவது குறித்து பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் விளக்கவுரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து ஈரோடு புத்தகத் திருவிழாவுக்கான பல்வேறு பணிகள் குறித்து விவாதித்து வகைப்படுத்தப்பட்டு, பணிகளின் தன்மைக்கேற்ப தனித்தனிக் குழுக்கள் பிரிக்கப்பட்டு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள், நூறாசிரியர் திட்டப் பொறுப்பாளர்கள், பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பேரவையின் செயலாளர் ந.அன்பரசு உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் பங்கேற்றுத் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

நிறைவாக பேரவையின் துணைத்தலைவர் பேராசிரியர் கோ.விஜயராமலிங்கம் நன்றியுரையாற்றினார்.






மக்கள் சிந்தனைப் பேரவை
வழங்கும்
ஈரோடு புத்தகத் திருவிழா - 2023
மாநிலப் பொதுக்குழுக் கூட்டம்


மக்கள் சிந்தனைப் பேரவை
ஈரோடு புத்தகத் திருவிழா - 2023
மாநிலப் பொதுக்குழுக் கூட்டம்